**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

**இவ்வழக்கில் அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரினை பெற்று சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.**

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

**எதிரி ஆஜரி. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. குறுக்கு விசாரணை செய்ய பணித்தபோது குறுக்கு விசாரரணை இல்லை என்று கூறினார்கள். எனவே குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.**

**எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 311 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

D.M-cum-JM.
T.V.Nallur.

**Judicial Form No.53**

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**திருவெண்ணெய்நல்லூர்.**

**CC. No.** 288 **/ 2024**

2025-ம் ஆண்டு ஜனவரி மாதம் 24-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் **அ.சா. 1** - வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.V.செல்வகோபால் Grade-III,Beanch Clerk, அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | த.கா. 444 |
| பெயர். | - | ரமேஷ் | வட்டம் | - | உளுந்தூர்பேட்டை |
| த/பெ. | - | சிவகுரு | வயது | - | 39 |
| கிராமம் | - | திருப்பெயர் | | | |

**24.01.2025**

எதிரிகள் ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை.

1. நான் தற்போது திருநாவலூர் காவல் நிலையத்தில் த.கா.444 ஆக பணியாற்றி வருகிறேன். கடந்த 26.08.2020 ம் ஆண்டு நான் திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் எழுத்தராக பணியாற்றிய போது 20.30 மணியளவில் பணியில் இருந்தபோது நிலைய பரா மு.நி.கா.1019 திரு. சந்திரமோகன் பாரா பொறுப்பில் இருந்தார். டி. எடையார் கிராமத்தை சேர்ந்த சில நபர்கள் பிரச்சனை செய்தது சம்மந்தமாக காவல் நிலையத்திற்கு வந்துள்ளார்கள்.

2. அப்போது கொரானா காலம் என்பதால் அதிகமாக கூட்டம் இருக்கக்கூடாது என்று பாரா காவலர் மு.நி.கா.1019 திரு. சந்திரமோகன் என்பவர் கொரானா என்பதால் அனைவரையும் வெளியில் இருக்குமாறும் குறிப்பிட்ட நபர்கள் மட்டும் உள்ளே வருமாறு கூறினார். டி. எடையார் கிராமத்தை சேர்ந்த அஞ்சாபுலி மகன் ரவீந்தர் என்பவர் பாரா போலீஸ்சை பார்த்து பெரிய புண்டையா என்று அசிங்கமாக திட்டி என்னையே வெளியே போக சொல்றயப்பா என்று சொல்லி கையால் சந்திரமோகன் என்பவரின் மூக்கிலும், மார்பிலும் குத்தி கொலை செய்யாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்.

3. அப்போது உள்ளே வந்த நானும் ஆய்வாளர் எழுத்தரான மு.நி.கா. 362 திரு. சத்தியராஜ் சண்டையை மறித்துவிட்டோம். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் இளங்கோவன் என்னை விசாரித்தார். மேற்படி சம்பவத்தில் சந்திரமோகனுக்கு காயம் ஏற்பட்டது. எதிரி மது அருந்தியிருந்ததால் மெமோ மூலம் மருத்துவமனைக்கு உதவி ஆய்வாளர் அனுப்பிவைத்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>.

1. அது கொரான காலம் என்றால் சரிதான். அந்த சமயத்தில் மாவட்டம் முழுவதும் எந்த விசாரணையும் நடைபெறவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தின் உள்ளே எனக்கு பதிவறை அறையில் எனக்கு இருக்கை ஒதுக்கப்பட்டிருந்தது. பாரா காவலர் காவல் நிலையத்தில் எங்கு இருப்பார் என்றால் காவல் நிலையத்தின் வராண்டாவில் இருப்பார். அன்றைய தேதியில் நிலைய அதிகாரி உதவி ஆய்வாளர் திரு. இளங்கோ.

2. உதவி ஆய்வாளர் காவல் நிலையத்திற்குள் 4 பேரை வைத்து விசாரித்துக்கொண்டிருந்தார் அதில் 2 பேர் பெண்கள். 6 மணிக்கு மேல் பெண்களை அழைத்து விசாரிக்கக்கூடாது என்று தீர்ப்புகள் உள்ளது தெரியுமா என்றால் தெரியும். திடிரென்று சத்தம் கேட்டுதான் ரூமில் இருந்து வந்து பார்த்தேனா என்றால் ஆமாம். நான் வந்து பார்த்தபோது காவல் நிலையத்தில் இருந்த இரும்பு கேட்டிற்கு உள்ளே சந்திரமோகனிடம் எதிரி பிரச்சனை செய்துகொண்டிருந்தாரா என்றால் சட்டையை பிடித்து மூக்கிலும், மார்பிலும் குத்தினார் நான் போய் மறித்துவிட்டேன்.

3. உள்ளே விசாரித்துக்கொண்டிருந்தவர்கள் எந்த ஊர்க்காரர்கள் என்று எனக்கு தெரியாது. நான் சொல்வதுபோல் ஒரு சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் உதவி ஆய்வாளரும் பெண் மனுதாரரை இரவு நேரத்தில் திட்டி அசிங்கப்படுத்தியதால் அப்போது அங்கிருந்த எதிரி ரவீந்தர் பெண் என்றும் பராமல் ஏன் இப்படி திட்டுகீறீர்கள் என்று கேட்டதற்கு உதவி ஆய்வாளர் கோவப்பட்டு சந்திரமோகனை வைத்து கொடுத்த பொய்

புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அந்த சமயத்தில் அந்த இடத்திலேயே இல்லை என்றாலும் அப்படி இருந்திருந்தால் சிசி டிவி புட்டேஜ்ஜை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

**Judicial Form No.53**

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**திருவெண்ணெய்நல்லூர்.**

**CC. No.** 523 **/ 2024**

2025-ம் ஆண்டு ஜனவரி மாதம் 24-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் **அ.சா. 6** - வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.V.செல்வகோபால் Grade-III,Beanch Clerk, அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 6 | தொழில் | - | உதவி ஆய்வாளர் |
| பெயர். | - | அரிதாஸ் | வட்டம் | - | விழுப்புரம் |
| த/பெ. | - | ராமசாமி | வயது | - | 60 |
| கிராமம் | - | விழுப்புரம் | | | |

<u>**24.01.2025**</u>

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை.

1. நான் தற்போது விழுப்புரம் தேசிய நெடுஞ்சலை ரோந்து எண்.7 ல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 15.08.2019 ம் தேதி நான் திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது 11.00 மணியளவில் இளந்துரை கிராமத்தை சேர்ந்த சுதாகர் மனைவி சோனியா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.536/2019 ச/பி. 279, 304(எ) இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகும்**.

2. பின்பு வழக்கு கோப்புகளை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**Judicial Form No.53**

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.**

**CC. No.** 241 **/ 2024**

2025-ம் ஆண்டு ஜனவரி மாதம் 24-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் **அ.சா. 6** - வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.V.செல்வகோபால் Grade-III,Beanch Clerk, அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 6 | தொழில் | - | காவல் ஆய்வாளர் |
| பெயர். | - | பாண்டியன் | வட்டம் | - | விழுப்புரம் |
| த/பெ. | - | முத்துக்குமாரசாமி | வயது | - | 53 |
| கிராமம் | - | விக்கிரவாண்டி | | | |

**24.01.2025**

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை.

1. நான் தற்போது விழுப்புரம் மாவட்டம் விக்கிவாண்டி வட்ட காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 02.02.2019 ம் தேதி அரகண்டநல்லூர் வட்ட காவல் ஆய்வாளராக பணியாற்றியபோது அரகண்டநல்லூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சிவானந்தம் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது கண்டாச்சிபுரம் வட்டம் ஆலம்பாடி கிராமத்தை சேர்ந்த பழனி மனைவி விஜயா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அரகண்டநல்லூர் காவல் நிலைய குற்ற எண்.52/2019 ச/பி. 279, 304(எ) இதச படி வழக்கு பதிவு செய்த எனது விசாரணைக்கு வைத்ததை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

2. பின்பு இவ்வழக்கின் சம்பவ இடமான முகையூர் டூ இருதயபுரம் செல்லும் சாலையில் மழலையர் ஊனம்முற்றோர் பள்ளி அருகே 02.02.2019 ம் தேதி மாலை 16.45 மணிக்கு சாட்சிகள் குமார் மற்றும் ஞானவேல் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை

பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அந்த மாதிரி வரைபடம் அசாஆ.4 ஆகும்.**

3. பின்பு பார்வை மகஜர் சாட்சிகளை விசாரித்து சம்பவ இடத்திலேயே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு இந்த சாலை விபத்து வழக்கில் TN-25-AT-9702- டிராக்டர் உடன் கூடிய டிப்பர் ஓட்டுனர் அதிகவேகமாகவும், அஜராக்கிரதையாகவும் ஓட்டி விபத்து ஏற்படுத்தி இந்த விபத்தில் இறந்துபோன சக்தி (வயது-20) த/பெ. பழனி ஆலம்பாடி கிராமம் என்பவரின் பிரேதம் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையில் சவக்கிடங்கில் இருந்ததை பிரேத விசாரணைக்கு வேண்டி சவக்கிடங்கு முன்பாக சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **அந்த பிரேத விசாரணை அறிக்கை அசாஆ.5 ஆகும்.**

4. பின்னர் சாட்சிகள் விஜயா, பெருமாள், ஆதிகேசவன், அருள்ஜோதி, மகாதேவன், ரமேஷ் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு இறப்பிற்கான உண்மையான காரணம் அறியும்பொருட்டு பிரேதத்தை உடல் கூறாய்வு செய்வதற்காக பிரேதத்தையும் வேண்டுகோள் கடிதத்தையும் காவலர் இளையராஜா என்பவரிடம் கொடுத்து அனுப்பிவைத்தேன்.

5. அந்த பிரேத விசாரணை அறிக்கையில் பஞ்சாயத்தார்கள் ஏகோபித்த கருத்தாக சாலை விபத்தில் அஜாக்கிரதையாக டிராக்டரை ஓட்டி சக்தி என்பவருக்கு இறப்பை ஏற்படுத்தியுள்ளார் என்று கருத்து தெரிவித்தனர். பின்பு இந்த வழக்கில் விபத்து ஏற்படுத்திய TN-25-AT-9702- டிராக்டர் மற்றும் டிப்பருடன் கூடிய ஓட்டுனர் ராஜாராமன் (வயது-30) த/பெ. கிருஷ்ணன், வி. சித்தாமூர் மதுரா, காரணை கிராமம், கண்டாச்சிபுரம் வட்டம் என்பவர் 04.02.2019 ம் தேதி 14.00 மணிக்கு நிலையம் ஆஜரானவரை கைதிற்கான காரணம் கூறி கைது செய்து பின்பு தக்க இரு நபர் ஜாமீனில் பிணையில் விடுவித்தேன்.

6. பின்பு இந்த வழக்கில் விபத்து ஏற்படுத்திய வாகனம் TN-25-AT-9702- என்ற டிராக்டர் மற்றும் டிப்பர் மற்றும் விபத்திற்குள்ளான வாகனம் TN-32-F-5918- என்ற பஜாஜ் பிளாட்டினா என்ற இரு சக்கர வாகனத்தையும் விபத்திற்கான உண்மை தன்மையை அறியும்பொருட்டு மோட்டார் வாகன ஆய்வாளர் விழுப்புரம் அவர்களுக்கு 08.02.2019 ம் தேதி அனுப்பிவைத்தேன். இந்த வாகன விபத்தில் இறந்துபோன சக்தி (வயது-20) த/பெ. பழனி என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த திருக்கோவிலூர் உதவி மருத்துவர் திரு. ராஜவினாயகம் என்பவரை 16.02.2019 ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். **அந்த பிரேத பரிசோதனை அறிக்கை அசாஆ.6 ஆகும்**.

7. பின்பு விழுப்புரம் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி. கவிதா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து இரண்டு வாகனங்களுக்கும் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை பெற்றேன். **அந்த மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைகள் (2 எண்ணிக்கைகள்) முறையே அசாஆ.7,8 ஆகும்**.

7. பின்பு இவ்வழக்கில் இறந்த சக்தியின் உடலை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய அரகண்டநல்லூர் காவலர் 2340 திரு. இளையராஜா மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சிவானந்தம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது விசாரணை முடித்து ஆஜர் எதிரி மீது ச/பி. 279, 304(எ)யின்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

1. முதல் தகவல் அறிக்கையை எனது மேல் விசாரணைக்காக 02.02.2019 ம் தேதி 16.15 மணிக்கு எனது பார்வைக்கு வைத்தார்கள். சம்பவம் நடந்த 3.15 மணி நேரம் காலதாமதமாகத்தான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த காலதாமதத்திற்கான காரணத்தை முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளாதா என்றால் வாதியால் தாமதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

2. முதல் தகவல் அறிக்கையில் காலம் நெ.8 ல் வாதியால் தாமதம் என்று சொல்லப்பட்டுள்ளது என்ன காரணம் என்றுகுறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவரை காலதாமதத்திற்கான காரணத்தை விசாரித்தேனா என்றால் விசாரித்தேன் அவர் அதைப்பற்றி கூறவில்லை. வழக்கு கோப்பை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட பிறகு சம்பவ இடத்திற்கு 02.02.2019 ம் தேதி 16.45 மணிக்கு சம்பவம் இடம் சென்றேன்.

3. சம்பவ இடம் சென்றபோது சம்பவ இடத்தில் யார் யார் இருந்தார்கள் என்றால் சாட்சிகள் குமார் மற்றும் ஞானவேல் விபத்து ஏற்படுத்திய வாகனம், எனது வாகன ஓட்டுனர் ஆகியோர்கள் இருந்தோம். சம்பவம் நடந்தபோது யார் யார் இருந்தார்கள் என்பதை பற்றி விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். சம்பவ இடத்தில் சம்பவத்தை நேரடியாக பார்த்த சாட்சி பெருமாள் த/பெ. கணேசன், ஆலம்பாடி என்பவர் சம்பவ இடத்தில் இருந்தார். வேறு யார் யார் சம்பவ இடத்தில் இருந்தார்கள் என்றால் அப்போது நான் சம்பவ இடத்தில்

இருக்கும்போதே சம்பவ சாட்சிகள் மட்டும் இருந்தார்கள். நான் பிரேதத்தை திருக்கோவிலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்துவிட்டார்கள்.

4. சம்பவ சமயத்தில் யார் யார் இருந்தார்கள் என்று எனது விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் அதைப்பற்றி யாரும் கூறவில்லை. நான் விசாரித்த சாட்சிகள் அனைவரும் ஆலம்பாடி கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அவர்கள் யாரும் பெருமாளை தவிர சம்பவ சமயத்தில் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான். மேற்படி சம்பவ இடத்தில் நேரடியாக பார்த்த பெருமாள் என்பவர் போன் மூலம் சக்தியின் பெற்றோருக்கு தகவல் தெரிவித்துள்ளார்.

5. சாட்சி பெருமாள் குறிப்பாக யாருக்கு தகவல் சொன்னார் என்பதை எனது விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் அவரது உறவினர்களுக்கு தெரிவித்ததாக பெருமாள் கூறியுள்ளார். நான் சம்பவ இடம் சென்றபோது சாட்சிகள் அங்கு வந்தார்களா இல்லை முன்கூட்டியே தகவல் சொல்லி அங்கு வந்தார்களா என்றால் அப்படியென்றால் தவறு. சம்பவ இடத்தில் பார்வை மகஜர் சாட்சிகள் இருந்தார்கள். அவர்களை வைத்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

6. விபத்திற்குள்ளான வாகனத்தை நான் போய் அப்புறப்படுத்தினேனா ஏற்கனவே அப்புறப்படுத்தியிருந்ததா என்றால் நான் செல்லும்போது போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் இரண்டு வாகனங்களும் சாலையின் ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று என்னால் சொல்லமுடியாது என்றால் அது தவறு. நேரடியாக பார்த்த சாட்சி பெருமாள் என்பவர் மேற்படி இந்த விபத்தில் இறந்துபோன சக்தி என்பவர் இரு சக்கர வாகனத்தில் முன்னால் சென்றபோது அதிகவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி சென்று முன்னால் சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது எனது விசாரணையில் தெரியவந்தது.

7. எனது விசாரணையில் அந்த வாகனங்களை யார் அப்புறப்படுத்தியது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் அதைப்பற்றி சொல்லவில்லை. முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு காலதாமதமாக அனுப்பப்பட்டது குறித்து வழக்கு பதிவு செய்த உதவி ஆய்வாளரிடம் விசாரணை செய்தேனா என்றால் ஆம். அவர் நிலைய எழுத்தர் மூலம் அனுப்பிவிட்டதாக கூறினார் அதை பற்றி நான் வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை. நான் மேல் விசாரணை அதிகாரி என்பதால் முதல் தகவல் அறிக்கையின் 13 வது காலத்தில் சொல்லப்பட்டுள்ளவாறு முதல் தகவல் அறிக்கையின் நகலை இலவசமாக

கொடுக்கப்பட்டதா என்பது குறித்து விசாரணை செய்தேனா என்றால் இல்லை. அசா1 தனது முதல் விசாரணையில் சம்பவம் 12.00 மணிக்கு நடந்ததாக சொல்லியுள்ளார் என்றால் தவறு. அசா.1 குறுக்கு விசாரணையில் காவல் நிலையத்தில் வைத்து புகாரை எழுதியதாகவும் அதில் என்ன எழுதியிருக்கிறது என்று தெரியாது என்று சொல்லியுள்ளார் என்றால் என்னுடைய விசாரணையில் அப்படி கூறவில்லை.

8. அசா.2 தனது சாட்சியத்தில் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை தூரத்தில் இருந்ததாக பார்த்ததாக கூறியுள்ளார் என்றால் தவறு. மேற்படி அசா2 நான் விசாரித்தபோது எனது வாக்குமூலத்தில் அப்படி கூறவில்லை. அசா.2 பெருமாள் ஆலம்பாடியை சேர்ந்தவர் இறந்தவரின் உறவுக்காரர் என்றால் சரிதான். அசா2 தனது குறுக்கு விசாரணையில் இறந்தவர் இரு சக்கர வாகனத்தை நடுரோட்டில் ஓட்டி சென்றதாக சொல்லியுள்ளார் என்றால் அது தவறு எனது விசாரணையில் அவ்வாறு சொல்லவில்லை.

9. சம்பவ இடத்திற்கு அருகில் ஸ்கூல்பகுதி உள்ளதால் வேகத்தடை இருக்கிறது என்றால் அது தவறு வேகத்தடை இல்லை. நான் சம்பவ இடத்தில் யாரையும் விசாரிக்கவில்லை என்றாலும், எனது விசாரணை துரித விசாரணை இல்லை என்றாலும் எனது விசாரணை இறந்த சக்திக்கு ஆதரவாக செய்யபட்டுள்ளது என்றால் அது தவறு. நான் சம்பவ இடத்தில் சாட்சிகளை விசாரிததிருந்தால் உண்மை தெரிந்திருக்கும் என்றாலும் இறந்தவருக்கு நஷ்டஈடு கிடைக்கவேண்டும் என்பதால் சரியாக புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றாலும் இறந்த சக்தியின் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

# Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**திருவெண்ணெய்நல்லூர்.**

**CC. No.** 98 **/ 2024**

2025-ம் ஆண்டு ஜனவரி மாதம் 24-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் **அ.சா. 2**- வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.V.செல்வகோபால் Grade-III,Beanch Clerk, அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2. | தொழில் | - | ஆசிரியர் |
| பெயர். | - | செந்தில் ரூபன் | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| த/பெ. | - | சவரிமுத்து | வயது | - | 44 |
| கிராமம் | - | முகையூர் | | | |

**24.01.2025**

1வது எதிரி ஆஜர். 3 முதல் 5 எதிரிகள் ஆஜரில்லை. 3 முதல் 5 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை.

1. நான் முகையூரில் குடியிருந்து விழுப்புரம் ஜான்டூயி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வருகிறேன். அசா1 எனது தங்கை. 1வது எதிரி எனது தங்கையின் கணவர். மற்ற எதிரிகளை தெரியும். கடந்த 22.01.2007 ல் அசா.1க்கும், 1வது எதிரிக்கும் திருக்கோவிலூரில் உள்ள நல்லாயன் ரோமன் கத்தோலிக் சர்ச்சில் திருமணம் நடந்தது. எனது தங்கைக்கு 12 பவுன் நகை போட்டோம். மாப்பிள்ளைக்கு 2 செயின், அரை பவுன் மோதிரம் போட்டோம்.

2. 2011ல் 1வது எதிரி அவரது மாமன் மகள் ஜெனிட்டாவுடன் கள்ளத் தொடர்பு வைத்துக்கொண்டு எனது தங்கையை அடித்து சித்தரவதை செய்தார். இரு சக்கர வாகனம், டிவி, பிரிட்ஜ் மற்றும் கூடுதலாக 10 பவுன் நகை இருந்தால்தான் என்னுடன் வாழமுடியும் என்று சொல்லி வீட்டிற்கு போய் வாங்கிவா என்று எனது தங்கையிடம் சொன்னார்.

3. விழுப்புரத்தில் வீடு கட்டுவதற்காக இரண்டு பிளாட் வாங்க போறேன் அதற்கும் பணம் தேவைப்படுகிறது. நீ பணமும், நகையும் கொடுத்தால்தான் வாழ முடியும் இல்லை என்றால் வாழ முடியாது என்று சொன்னார். அதன் பேரில் எனது அம்மா சாந்தூஸ்மரி என்னிடம் சொன்னத்தில் பேரில் நான் 10 பவுன் நகை கொடுத்தேன். எனது தாய் மாமன் வேளாங்கண்ணியும் 10 பவுன் நகை கொடுத்தார்.

4. அதன் பேரில் விழுப்புரத்தில் எனது தங்கை மற்றும் 1வது எதிரி பெயரில் இரு பிளாட் வாங்கினார்கள். மீண்டும் 2011ல் ஒரு நாள் இரவு சுமார் 07.00 மணியளவில் 1வது எதிரி மது அருந்திவிட்டு வந்து எனது தங்கையை அடித்து அவர் போட்டிருந்த தாலியை அறுத்து எறிந்துவிட்டார். உடனே எனது தங்கை எனக்கு தொலைபேசி மூலம் தகவல் சொன்னார். நான் உடனே போய் 1வது எதிரியிடம் கேட்டபோது 1வது எதிரி என்னை கீழே தள்ளிவிட்டார்.

5. அப்போது 1வது எதிரியின் அண்ணி புஷ்பராணி சம்பவ இடத்திற்கு வந்தார் அவரிடம் நான் நியாயம் கேட்டேன். இதேபோல் அடித்துக்கொண்டிருந்தால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்போவதாக சொன்னேன். அதெல்லாம் வேண்டாம் நான் பேசி சமாதானப்படுத்துகிறேன் என்று புஷ்பராணி சொன்னார். நானும் விட்டுவிட்டேன். நகை 20 பவுன் பிளாட் வாங்குவதற்காக கொடுத்ததை வாங்க முடியாது என்பதால் அப்படியே விட்டுவிட்டேன்.

6. மீண்டும் சில மாதங்கள் கழித்து மீண்டும் அதே மாதிரி எனது தங்கையை அடித்து சித்தரவதை செய்தார். மீண்டும் கேட்டபோது 1வது எதிரியின் அண்ணன் ஜான்ஜோசப் வந்தார். என்னவென்று கேட்டதற்கு எனது தங்கை மாமன் மகளோடு ஏன் பேசுகீறீர்கள் என்று 1வது எதிரியுடம் கேட்டதற்கு 1வது எதிரி தன்னை மூஞ்சிலெல்லாம் அடித்து இது பண்ணியதாக சொன்னார்.

7. 1வது எதிரி மாமன் மகளோடு பேசிய உரையாடலை எனது தங்கை மெமரி கார்டில் பதிவு செய்து வைத்திருந்தார். அதை நான் கேட்கலாம் என்று இருந்தபோது 1வது எதிரியின் அண்ணன் ஜான்ஜோசப் குடும்ப பிரச்சனை பேசிக்கொள்ளலாம் என்று சொல்லி அதை உடைத்துவிட்டார். எனது தங்கையை முகையூருக்கு அனுப்பமாட்டார். யாரிடமும் பேசக்கூடாது என்று சொல்வார். 1வது எதிரி ஆர்மியில் இருந்து விடுமுறைக்கு வீட்டிற்கு வந்தாலும் வீட்டில் தங்குவது இல்லை. அவர்களது அண்ணன் ஜான்ஜோசப் அண்ணி புஷ்பராணியின் வீட்டில்தான் இருப்பார்.

8. மேலும் எனது தங்கை தனியார் பள்ளியில் வேலை செய்துவந்தார். 1வது எதிரி எனது தங்கையை வேலைக்கு செல்லக்கூடாது என்று சொல்லிவிட்டார். வேலைக்கு போனால் சான்றிதழை எரித்துவிடுவேன் என்று சொன்னார். அவரது சான்றிதழதை என்னிடம் கொடுத்துவைத்திருந்தார். மீண்டும் 2016 ல் இதுபோல் பிரச்சனை ஏற்பட்டது. நான் பள்ளியில் இருக்கும்போது என்னுடைய மனைவி போன் செய்து உங்களுடைய தங்கையின் கணவர் சான்றிதழை கேட்கிறார் என்று சொன்னார். நான் எதற்கு என்று கேட்டேன். அதில் 1வது எதிரியின் ஆதார் கார்டு உள்ளது என்றும் அந்த ஆதார் கார்டை வைத்து வாங்கிய பிளாட்டை விற்கபோவதாக சொன்னார். சான்றிதழ்தானே கேட்கிறார் நாம் வாங்கிக்கொள்ளலாமே என்று கொடுத்துவிட்டேன்.

9. அதில் எனது தாயாரின் கேன்டின் கார்டு, எனது தங்கையின் நகையை அடகு வைத்து பல்லவன் வங்கியின் பாஸ் புக், வங்கியின் ஏடிஎம். கார்டு ஆகியவற்றை எனது மனைவியடம் இருந்து 1வது எதிரிதான் வாங்கிச்சென்றார். அதன் பிறகு 2016 ல் சண்டை போட்டுக்கொண்டு எனது தங்கை வீட்டிற்கு வந்துவிட்டார். திருக்கோவிலூர் மகளிர் காவல் நிலையத்தில் புகார் செய்தோம். காவல் நிலையத்தில் எனது தங்கையின் பெயரில் உள்ள பிளாட்டை அவர் பெயரில் மாற்றி கொடுத்தால்தான் ஆவணங்களை தருவோம் என்று சொன்னார். எனது தங்கையின் பெயரை நீக்கிவிட்டு பிள்ளைகளுக்கு கார்டியனாக அவர் பெயரை போட்டுக்கொண்டார்.

10. 1வது எதிரியின் நிக்கிதா என்ற பெண் குழந்தையை அவரது அண்ணி புஷ்பராணியிடம் கொடுத்துவிட்டார். சாம்சன் ஜோஸ் என்ற ஆண்குழந்தையை அவரது அண்ணன் லூர்துமணி அவரிடம் கொடுத்துவிட்டார். நானும் எனது தங்கை மற்றும் எனது தாயார் மற்றும் காவலர் புனிதா ஆகியோருடன் சென்று புஷ்பராணி, லூர்துமணி ஆகியோரிடம் குழந்தைகளை கேட்டபோது அங்கு புஷ்பராணி, லூர்துமணி, ரீட்டா ஆகியோர்கள் இருந்து விவாகரத்து கொடுத்தால்தான் குழந்தையை தருவோம் என்று சொன்னார்கள்.

11. அதன் பிறகு காவல் துறை துணை கண்காணிப்பாளர் கீதாவிடம் முறையிட்டோம். அவர் இரண்டு குழந்தைகளையும் அவர்களிடம் இருந்து பெற்றுக்கொடுத்தார். சான்றிதழ்கள் எங்களிடம் இல்லை நீங்கள் ஜெனித் அகஸ்டியனிடம் வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். அதன் பிறகு எனது தங்கை எதிரிகள் மீது வழக்கு தாக்கல் செய்து நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இது தொடர்பாக போலீசார் என்னிடம் கேட்கவில்லை.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

1. 2011 மற்றும் 2014ல் புகார்தாரர் மீது 1வது எதிரி தாக்குதல், சித்தரவதை செய்தது தொடர்பாக கூறப்பட்ட விபரங்கள் பேரில் நானே, புகார்தாரரோ ஏதாவது புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. அதனால் நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு 1வது எதிரியோ அவர்களது குடும்பத்தாரோ எனது தங்கையை எந்த வித கொடுமையோ சித்தரவதையோ செய்யவில்லை என்றால் அவர் கொடுத்தார் குடும்ப பிரச்சனை என்பதால் புகார் கொடுக்கவில்லை.

2. 1வது எதிரி ஒரு பெண்ணிடம் கள்ள தொடர்பு வைத்ததாக சொல்லும் நிலையில் அது தொடர்பாக ஏதாவது புகார் கொடுத்தோமா என்றால் எனது தங்கை வேண்டாம் என்று சொல்லிவிட்டார். ஏனெனில் எனக்கு இரண்டு குழந்தைகள் இருக்கிறது என்று சொன்னார். எனது சகோதரி சித்தரவதை செய்ததை அவர் எனக்கு போனில் சொன்னதாக சொல்லும் நிலையில் என்னுடைய போன் நெம்பரையோ எனது தங்கையின் போன் நெம்பரையோ முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

3. எனது தங்கை எங்கு சம்பவம் நடந்ததாக சொல்லி புகார் கொடுத்தார் என்றால் விழுப்புரம் வாடகை வீட்டில் நடந்ததாக சொல்லியுள்ளார். முகையூரில் எங்கள் வீட்டில் தங்கியிருந்தார் அப்போதும் எனது தங்கையை அடித்துள்ளார். புகாரில் மேற்கண்ட இடங்களையெல்லாம் சொல்லியுள்ளாரா என்றால் ஆமாம். 2011ல் எனது தங்கையை பிளாட் வாங்கவேண்டும் என்றும் பணம் நகை கொண்டுவரச்சொல்லியும் சித்தரவதை செய்ததாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் 2007ல் இருந்தே பிரச்சனை நடக்கிறது. பிளாட் 2011ல் வாங்கப்பட்டது.

4. பணம், நகைகள் எங்கு எந்த இடத்தில் வாங்கப்பட்டது என்ற விபரத்தை முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை 2011ல் எனது தங்கை பணம், நகை கொடுத்தால்தான் வாழ முடியும் என்று சொன்னத்தின் பேரில் நகை கொடுத்தோம். 2011ல்தான் நகை, பணம் கொடுக்கப்பட்டதாக என்றால் சரிதான். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அந்த மணை 2010ல் வாங்கப்பட்டது என்றும் நான் 2011ல் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை 2011ல்தான் மனை வாங்கப்பட்டது.

5. எனது தங்கை 2016 ல் மார்ச் மாதம் புகார் கொடுத்தார். அந்த புகாரில் என்னையும், எனது மனைவி எனது மாமியார் ஆகியோர்களை சாட்சியாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அந்த புகாரின் அடிப்படையில்தான் நான் தற்போது சாட்சியம் சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். அந்த புகார் திருக்கோவிலூர் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். திருக்கோவிலூர் போலீசார் இந்த வழக்கை தாக்கல் செய்தார்களா என்றால் அவர்கள் மறுத்துவிட்டார்கள் நீதிமன்றம் மூலமாக தாக்கல் செய்யப்பட்டது.

6. இந்த புகார் கொடுப்படுவதற்கு முன்பு எனது சகோதரி பெயரில் விழுப்புரத்தில் எனது சகோதரி குடியிருந்தபோது அவருக்கும் பக்கத்தில் குடியிருந்த பிரவீன்குமார் என்ற நபருடன் கள்ளத்தொடர்பு இருந்ததாக கூறி 1வது எதிரியால் விழுப்புரம் மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த விசாரணைக்கு நானும் எனது தாயார், எனது மனைவி ஆகியோர்கள் சென்றோம் என்றால் சரிதான். அங்கு சென்றபோது சம்மந்தப்பட்ட பிரவீன்குமாரையும் கூப்பிட்டு விசாரித்தார்கள் என்றால் சரிதான்.

7. அந்த விசாரணையில் பிரவீன்குமாரிடம் இருந்து எனது சகோதரிக்கு 20 சவரன் நகைகள், 13 சவரன் நகைகள் கொடுக்கப்பட்டது என்றால் உண்மைதான். மேற்படி நகைகள் 1வது எதிரி மேற்படி பிரவீன்குமாரிடம் கொடுக்க கூறியதாக சொன்னத்தின் பேரில் அவர் கொடுத்துள்ளார். அதை நாங்கள்தான் வாங்கி கொடுத்தோம். 1வது எதிரி சொன்னத்தின் பேரில் நகைகள் பிரவீன்குமாரிடம் எனது தங்கையால் கொடுக்கப்பட்டிருந்தால் 1வது எதிரி மேற்படி காவல் நிலையத்தில் எனது சகோதரி பெயரிலும், பிரவீன்குமார் பேரிலும் புகாரே கொடுத்திருக்கமாட்டார் என்றால் அப்படியெல்லாம் இல்லை. அவர் முன்னாடியே ஜோடனை செய்து விவாகரத்து பெறுவதற்காக முன்கூட்டியே திட்டமிட்டு கொடுக்கப்பட்ட பொய் புகார்.

8. ஜோடிக்கப்பட்ட பொய் புகார் என்று சொல்கிறேனே நானோ எனது சகோதரியோ சட்ட ரீதியாக நடவடிக்கை எடுத்தோமா என்றால் எனது தங்கை காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததால் நான் கொடுக்கவில்லை. மேற்படி ஜோடிக்கப்பட்ட பொய் புகாருக்காக எனது தங்கை கொடுத்தாரா என்றால் அதற்காக கொடுக்கவில்லை. காரணம் அது உண்மையான புகார் என்பதால்தான் கொடுக்கப்படவில்லை என்றால் குடும்ப பிரச்சனை என்பதால்தான் கொடுக்கவில்லை.

9. எதிரி கள்ளத்தொடர்பு வைத்திருப்பதாகவும், சித்தரவதை செய்ததாகவும், சொல்லப்பட்டதின் பேரில் 2016 வரை நடவடிக்கை எடுக்காததற்கு காரணம் என்னவென்றால் குடும்ப பிரச்சனை என்பதால் கொடுக்கவில்லை. மேற்கண்ட பிரச்சனை திருமணமான நாளில் இருந்து இருக்கிறதா என்று சொல்கிறேனா என்றால் ஆமாம். எனது சகோதரி புகார்கொடுக்கும்போது நான் உடன் இருந்தேனா என்றால் ஆமாம். அந்த புகாரை அவரது கைப்பட எழுதி கொடுத்த புகாரா என்றால் ஆமாம்.

10. சான்றிதழ்கள், ஏடிஎம். கார்டு மற்றும் இதர ஆவணங்கள் நான் வீட்டில் இல்லாபோது எனது மனைவியிடம் பெற்றுச்சென்றுவிட்டு இன்று வரை திருப்பி கொடுக்கவில்லை என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் ஆமாம். அவ்வாறு திருப்பி கொடுக்காததற்காக நானோ, எனது மனைவியோ, சகோதரியோ ஏதாவது சட்ட ரீதியான நடவக்கை எடுத்தோமா என்றால் மிலிட்டரி போலீஸ் என்பதால் அவருடைய அதிகாரிகளுக்கு கடிதம் போட்டோம். இந்த விபரத்தை எனது சகோதரி புகாரில் சொல்லியுள்ளார் என்றால் சொல்லியுள்ளார்.

11. எனது மனைவி போட்டுள்ள நகை எனக்கு போட்டுள்ள 2 சவரன் நகை எனது திருமணத்தின் போது 1வது எதிரியால் வாங்கி கொடுக்கப்பட்டது என்றால் இல்லை. நாங்கள் போட்டுள்ள புகார் விசாரணை செய்யப்பட்டு அது பொய் புகார் என்பதால்தான் அதை அதன் மீது வழக்கு பதிவு செய்யவில்லை என்றால் அவர்கள் விசாரிக்கவே இல்லை. அவன் தரமாட்டான் நீங்கள் டூபிலிகேட் சான்றிதழ் வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். நான் விசாரிக்கவே இல்லை என்று சொல்லும் நிலையில் அவர்கள் டூபிலிகேட் சான்றிதழ் வாங்க சொல்லி பொய்யாக சொல்கிறேன் என்றால் அவர் காவல் துறையை பணம் கொடுத்து விலைக்கு வாங்கிவிட்டார் அதனால் அவருக்கு சாதகமாக செயல்பட்டார்கள்.

12. இந்த விபரத்தை எனது சகோதரி நீதிமன்றத்தில் கொடுத்த புகாரில் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. மேற்படி காவல்துறையினர் மீது ஏதாவது நடவடிக்கை எடுத்தோமா என்றால் இல்லை. எனது சகோதரி என்ன புகார் கொடுத்துள்ளார் என்றால் வரதட்சனை கொடுமை, சான்றிதழ் கேட்டு கொடுத்துள்ளார். போலீசார் கூப்பிட்டு விசாரித்து குழந்தைகளை அவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு என்னுடைய சகோதரியின் கெட்ட நடவடிக்கையால் குழந்தைகளின் எதிர்காலம் பாதிக்கப்படும் என்று நினைத்து 1வது எதிரியிடம் குழந்தைகளை ஒப்படைக்கப்பட்டது என்றால் சரியல்ல.

13. 1வது எதிரி ஊரில் இல்லாத சமயம் பார்த்து அவரது சகோதரர் சகோதரியை மிரட்டி குழந்தையை எங்கள் வசம் பெற்றுக்கொண்டோம் என்றால் இல்லை. புகார் கொடுப்பதற்கு முன்பு குழந்தைகள் யார் வசம் இருந்தது என்றால் அவரது அண்ணன் அண்ணியிடம் இருந்தது. அந்த நிலையில் நீதிமன்றம் மூலம்தான் சட்ட படி குழந்தைகளை பெறவேண்டும் என்றால் அது எனக்கு தெரியாது. அப்புறம் எதுக்கு காவல் துறை உள்ளது என்று சாட்சி கேட்கிறார்.காவல் துறையிடம் மனு கொடுத்துதான் குழந்தைகளை வாங்கினோம் என்றால் ஆமாம். குழந்தைகள் வேண்டும் என்று நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளோம். எந்த நீதிமன்றத்தில் மனு போட்டுள்ளோம் என்றால் திருக்கோவிலூர் நீதிமன்றத்தில் 2016 ல்.

14. 2016 ல் குழந்தைகள் எங்கள் வசம்தான் இருந்தது அதனால் குழந்தைகளை கேட்டு மனு போட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் 1வது 1வது எதிரியோ அல்லது 3 முதல் 5 எதிரிகளோ என்னுடைய தங்கையை எந்தவிதமான வரதட்சனை கொடுமை செய்யவில்லை என்றாலும் என்னிடமோ அல்லது எனது உறவினர்களிடமோ எவ்வித நகையோ பணமோ பெறவில்லை என்றாலும் என்னுடைய சகோதரி கொடுத்த பொய்யான புகாரின் பேரில் அவருக்கு அனுசரனையாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.